மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருப்பதுபோன்று கிராமப்புறங்களில் அமைப்பது என்பது, இப்போது இருக்கிற விளையாட்டுத் திடல்களை எந்த அளவிற்குப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பது ஒரு கேள்விக்குறிதான். காரணம், சர்வதேச அளவிலே போட்டி நடத்தவும், பயிலவும்தான், சென்னை போன்ற நகரங்களில் இதுபோன்ற விளையாட்டு மையங்கள் அமைக்கப்படுகின்றன. அதுபோல மாவட்டங்களில் கோயம்புத்தூர், இன்னும் பல முக்கியமான மாவட்டத் தலைநகரங்களில் எல்லாம் அமைக்கப்படுகின்றன. கிராமங்களில் உள்ள அந்த விளையாட்டுப் பகுதிகளை உருவாக்குவதற்காகத்தான், இந்த ஆண்டு விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற நோக்கத்தோடு, வயதுவரம்பின்றி, ஒன்றியங்களில், மாவட்ட அளவில், மாநில அளவில் வீரர்களைத் தேர்ந்தெடுத்து, போட்டிகள் நடத்தி, அதற்கான செலவுகளை ஏற்று பரிசுகளையும் கொடுப்பதற்கான ஓர் அடிப்படைத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். வினா எண் 128, திரு. சி. சண்முகவேலு. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

128—

தையற்பயிற்சிப் பள்ளி

***2072—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் மகளிருக்காக தையற்பயிற்சிப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் ஒரு தையல் பயிற்சி நிலையம் சுழற்சி முறையில் வருடத்திற்கு ஒருமுறை இடமாற்றம் செய்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுக்கரை என்ற இடத்தில் 31–12–2006 வரை இத்தையல் பயிற்சி நிலையம் செயல்படும். 1–1–2007 முதல் பயிற்சி நிலையம் தேவையிருப்பின் உடுமலைப்பேட்டைக்கு மாற்றம் செய்வது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது மதுக்கரையிலே இருக்கக்கூடியதை சுழற்சி முறையிலே தேவைப்படும்பட்சத்தில் உடுமலைப்பேட்டைக்குக் கொண்டு வருவதாகக் கூறினார்கள். என்னைப் பொறுத்தவரை, நான் கூறிக்கொள்ள விரும்புவது, அந்த தையல் பயிற்சிப் பள்ளியானது பல்வேறு இடங்களிலே பயிற்சி கொடுத்து வருகிறது. அதிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக்கூட பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்தத் தையல் பயிற்சி மையங்கள் மூலமாக பயிற்சி கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பெண்கள் சுய உதவிக் குழுவிலும் அதிகமான நபர்கள் அந்த தையல் பயிற்சியிலே ஈடுபட்டு, அதை ஆர்வமாக, ஒரு தொழிலாகச் செய்யக்கூடிய வகையிலே, அருகிலே இருக்கக்கூடிய திருப்பூர் போன்ற பகுதியிலே, அந்த நூல்களை, அந்தத் துணிகளைக் கொண்டுவந்து தைக்கக்கூடிய வகையிலே, அந்த தையல் பயிற்சியிலே, அதிகம் பயிற்சி பெற்றுள்ளார்கள். சுய உதவிக் குழுவைச் சேர்ந்த அந்தப் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையிலே, அவர்களுக்கு அந்தத் தையல் பயிற்சியைக் கொடுக்கக்கூடிய வகையிலே, நடப்பு ஆண்டிலேயே அதற்கென்று தனியாக ஒரு சொசைட்டியோ அல்லது ஒரு சங்கமோ அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து, நடத்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அதோடு, அந்தப் பகுதியிலே, உடுமலை பகுதிக்குட்பட்ட வனப் பகுதியிலே 14 செட்டில்மெண்ட் பகுதிகள் உள்ளன. அங்கு பெண்கள் சுய உதவிக் குழுவினர் அதிகமாக உள்ளார்கள். அங்கே இருக்கக்கூடிய பெண்களும் குழுவிலே அங்கம் வகிக்கிறார்கள். தையல் பயிற்சியிலேயும் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே சில மாவட்டங்களிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சணமுகவேலு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சி. சண்முகவேலு: கேள்விக்குதான் வருகிறேன். சில மாவட்டங்களிலே கொடுக்கப்படுவதைப்போல, அந்த வனப் பகுதியிலே இருக்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்தப் பயிற்சி மையங்களைப்போல, எங்கள் பகுதியிலே அந்த செட்டில்மென்ட் பகுதியிலும் ஒரு பயிற்சி மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கருத்தினை மனதில் கொண்டு, அதிகாரிகளிடம் கலந்து பேசி, கண்டிப்பாக அரசு இதனைப் பரிசீலிக்கும். மேலும், உங்கள் தொகுதியில் உள்ள பெண்கள் ஏற்கெனவே தையற் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ், தையல் இயந்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தால், இத்திட்டத்தின்மூலம் உங்கள் தொகுதி பெண்கள் பயன்பெறலாம் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலே பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு அங்கு திட்ட அலுவலர் அவர்கள்மூலமாக grading கொடுக்கக்கூடியதை நிறுத்தி வைத்துள்ளார்கள். அதை உடனடியாகக் கொடுக்கக்கூடிய வகையிலே அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கூறிக்கொள்கிறேன். அதோடு, அங்கு இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள், N.G.O.-கள், பதிவு செய்யப்படுவதை, மாவட்ட திட்ட அலுவலரிடமே பதிவு செய்யக் கூடாது என்றும், அதை மாநில அளவிலே Director-அவர்களிடம் பதிவு செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அதையும் மாற்றி, அங்கேயே பதியக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டறிய விரும்புகிறேன்.